# "நம் தேவனால் கூடும்"

*சக்தியினால் துடித்துக் கொண்டிருக்கும் ஒரு உலகத்தில் நாம் வாழுகின்றோம்.*

*டெக்ஸாஸில் உள்ள கிளிபர்ன் என்ற இடத்தில் எனது குடும்பத்தினர் வசித்த பொழுது, அங்கிருந்த உள்ளூர் சபையின் உறுப்பினர்களில் பலர் க்ளென் ரோஸ் என்ற இடத்தில் இருந்த கொமான்க் பீக் மின் உற்பத்தி நிலையத்தில் வேலை செய்தார்கள். அப்படிப்பட்ட உற்பத்தி நிலையத்தின் உற்பத்தித் திறன் என்பது நம்ப முடியாத அளவு பெரியதாகும். ஒரு கிராம் அளவுள்ள யுரேனியம் என்ற பொருள் அணுப் பிளப்பு அடையும் போது, இருபது டன்கள் எடையுள்ள வெடி மருந்திற்குச் சமமான சக்தியை அது உண்டாக்குகின்றது என்று எனக்குக் கூறப்பட்டது. ஒரு கிராம் என்பது எவ்வளவு பெரியது என்று உங்களால் கற்பனை செய்ய முடியாவிட்டால், நான் எனது கையில் பிறந்த நாள் மெழுகுதிரி ஒன்றைப் பிடித்திருப் பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அந்த மெழுகுதிரி ஏறக்குறைய ஒரு கிராம்தான் இருக்கும். அதைக் கொளுத்தி னால் அது ஒரு காப்பிக் கோப்பை நிறைய உள்ள காப்பியை வெதுவெதுப்பாக்குவதே மிகவும் அரிதான செயலாகும். ஆனால் அதுவே, உட்கரு உலையில் இருக்கும் யுரேனியமாக இருந்தால், அது இருபது டன் எடையுள்ள TNT (வெடி மருந்து)க்கு இணையான சக்தியை உண்டாக்க முடியும். இருந்தாலும் நான் அந்த விளக்கத்தை மேம்படுத்த முடியும்: $E=MC^2$ என்ற ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் சமன்பாட்டைப் பயன்படுத்தி, அந்தச் சிறு மெழுகுதிரியானது முற்றிலும் சக்தியாக மாற்றப்பட்டதென்றால், அது ஏறக்குறைய 40,000 பேர் வசிக்கும் கிளிபர்ன் என்ற அச்சிறிய நகர்ப் பகுதி முழுவதிற்கும் ஒரு நாளைக்குப் போதுமான சக்தியை உண்டாக்குவதாக இருக்கும்!*

*ஆம், இந்த உலகம் சக்தியினால் துடித்துக் கொண்டிருக் கின்றது. இந்த சக்தி தன்னாலே ஏற்பட்டதல்ல, இதற்கு ஒரு மூலாதாரம் உண்டு. அந்த மூலாதாரம் தேவனே ஆவார் - அவர்*

சர்வவல்லமையுள்ள தேவன், எல்லா வல்லமையும் உள்ள தேவன் ஆவார்.

தேவன், வல்லமையின் தேவனாயிருக்கின்றார் என்ற உண்மையானது அவரது பிள்ளைகளுக்கு எப்பொழுதும் ஆறுதல் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோர் அச்சுறுத்தப்பட்ட பொழுது, அவர்கள், "நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார் ..." (தானி. 3:17அ) என்று பதில் அளித்தார்கள். அவர்களின் பதிலில் உள்ள திறவுகோல் வார்த்தையானது நமது வேதபாடப் பகுதியாகப் பயன்படும்: ''எங்கள் தேவன் ... வல்லவராயிருக்கிறார்.'' அவர்கள், வல்லமையுள்ள ஒரு தேவனைத் தாங்கள் ஆராதித்ததாக விசுவாசித்தார்கள்.

ஆஸ்திரேலியாவில் ஊழியக்குழு ஒன்றில் நான் ஊழியம் செய்த வேளையில், ஒரு காலகட்டத்தில், செய்யத் தேவையாயிருந்தவற்றைச் செய்யக்கூடிய என் சுயதிறமையில் சந்தேகம் கொண்டேன். அந்தத் தாழ்வான காலகட்டத்தில், "எங்கள் தேவன் வல்லவராயிருக்கிறார்" என்ற சொற்றொடர் எனக்குள் உரைத்தது. இவ்வார்த்தைகளை நான் எனது வேதவாசிப்பில் கண்டேனா அல்லது யாரேனும் ஒருவர் அவைகளை எனக்குச் சுட்டிக்காட்டினார்களா என்பது எனக்கு நினைவில்லை, ஆனால் தேவனுடைய வார்த்தையானது இருதயத்தில் எவ்விதம் பேச முடியும் என்பதைப் புதிதாய் (மறுபடியும்) நான் அறிந்தேன். ஒருவருடைய சொந்த செயல்பாடல்ல, ஆனால் தேவனுடைய செயல்பாடே முக்கியமானது.

தேவனுடைய செயல்பாடு பற்றி நாம் பேசும் பொழுது, நாம் அவருடைய வல்லமையைப் பற்றியே பேசுகின்றோம். புதிய ஏற்பாட்டில் ''கூடும்'' என்று (வல்லவர்) மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "வல்லமை" என்பதற்கான வார்த்தையில் இருந்தே வருகின்றது. தேவனுடைய சர்வ வல்லமை பற்றிய வசனப் பகுதிகளைப் படிப்பதனால் நாம் தேவன் வல்லமை நிறைந்தவராயிருக்கின்றார் என்று வலியுறுத்த முடியும், ஆனால் இப்பாடத்தில் நாம் அவ்வித அணுகு முறையைப் பயன்படுத்தப் போவதில்லை. "எங்கள் தேவன் வல்லவராயிருக்கிறார்" என்ற சொற்றொடரின் மீது நாம் கவனம் செலுத்துவோம். இச்சொற்றொடர்

காணப்படும் எல்லா வசனப்பகுதிகளையும் பரிசோதிக்க நாம் முயற்சி செய்வோம். (மாறுபட்ட மொழிபெயர்ப்புகளில் இச்சொற்றொடர்கள் வித்தியாசமான வகையில் தரப் பட்டுள்ளதால் இது மிகவும் சிரமமானது தான். இருந்தாலும், வசனப்பகுதியிலோ அல்லது அடிக்குறிப்புகளிலோ நான் மிக முக்கியமான வசனப் பகுதிகள் யாவற்றையும் உள்ளடக்க முயற்சி செய்வேன்.) இந்தச் செய்தியின் செயல் விளைவு என்னவாயிருந்தாலும் அது ‘‘தேவனால் கூடும்’’ என்ற வார்த்தைகளிலேயே காணப்படும்.

## கடந்த காலத்தில் தேவன் வல்லவராயிருந்தார்

தேவன் வல்லவராயிருக்கிறார் என்பதை தேவனுடைய மக்கள் எப்பொழுதும் விசுவாசித்திருக்கின்றார்கள். தானியேல் 3ல், பாபிலோனிய அரசர், தம் உருவச் சிலைக்கு முன்னால் எல்லா மக்களும் விழுந்து வணங்க வேண்டும் என்று ஒரு கட்டளையைப் பிறப்பித்தார். எபிரெய மனிதர்களான மூன்று இளைஞர்கள் - சாத்ராக், மேஷாக் மற்றும் ஆபேத்நேகோ ஆகியோர் - அவ்வாறு செய்ய மறுத்து விட்டார்கள். அவர்கள் அரசரிடத்தில் கூட்டிக் கொண்டு வரப்பட்ட போது, அவர் (அரசர்) தம் கட்டளைக்கு கீழ்ப்படியத் தவறினால் உண்டாகும் விளைவுகளைப்பற்றி அவர்களுக்கு நினைவூட்டினார்: “பணிந்து கொள்ளாதிருந்தீர்களேயாகில், அந்நேரமே எரிகிற அக்கினிச் சூளையின் நடுவில் போடப்படுவீர்கள்; உங்களை என் கைக்குத் தப்புவிக்கப்போகிற தேவன் யார் என்றான்” (வ. 15ஆ). அப்பொழுதுதான் அந்த இளம் மனிதர்கள் பின்வரும் பதில் கொடுத்தார்கள்:

> நேபுகாத்நேச்சாரே, இந்தக் காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை. நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவரா யிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார் (வ. 16ஆ, 17).

ஆபிரகாம் அவரது மகனைப் பலியிடும்படி தேவனால் கட்டளையிடப்பட்டபோது நடந்தது இன்னொரு தலை

*சிறந்த உதாரணமாகும் (ஆதி. 22). ஆபிரகாமின் விசுவாசத்தைக் கண்டு நாம் திகைத்து நிற்கின்றோம். ஆபிரகாமினால் தேவனுக்குக் கீழ்ப்படிய முடிந்தது எவ்வாறு? (தேவைப் பட்டால் இவ்விடத்தில் இவ்வரலாற்றை விவரித்துக் கூறவும். ஆபிரகாம் தன் பலியைக் கொடுத்து நிறைவேற்ற தேவன் அனு மதிக்கவில்லை. மாறாக, அவர் பலி செலுத்த ஆட்டுக்கடா ஒன்றைத் தேவன் கொடுத்தார்.) எவ்வாறென்பதை எபிரெய நிருபத்தின் ஆசிரியர் நமக்குக் கூறுகின்றார்: "மேலும் விசுவாசத் தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்ட போது ஈசாக்கைப் பலியாக ஒப்புக் கொடுத்தான் ... மரித்தோரிலிருந்துயெழுப்பத் தேவன் வல்லவராயிருக்கிறாரென்றெண்ணி" (எபி. 11:17-19). எதையும் செய்ய வல்லமையுள்ள ஒரு தேவனை ஆபிரகாம் விசுவாசித்தார்!*

*ஏசாயா மற்றும் எசேக்கியா ஆகியோரின் நாட்களில் யேகோவாவின் வல்லமையைச் சந்தேகித்த புறதெய்வ வழி பாட்டாளரின் உதாரணம் நமக்கு உண்டு. அசீரியர்களின் அரசரான சனகெரீப் என்பவர், வடக்கு ராஜ்யத்திற்குள் வந்து தமக்கு முன் இருந்த ஒவ்வொன்றையும் அழித்துக் கொண்டிருந் தார். இப்பொழுது அவர் எருசலேமின் வாசல்கள் அருகில் நின்று கொண்டு - எருசலேம் மக்களுக்குப் பின்வருமாறு இகழ்ச்சியாகச் செய்தி அனுப்பினார்:*

> *நானும் என் பிதாக்களும் தேசத்துச் சகல ஜனங்களுக்கும் செய்ததை அறியீர்களோ? அந்த தேசங்களுடைய ஜாதிகளின் தேவர்கள் அவர்கள் தேசத்தை நம்முடைய கைக்குத் தப்புவிக்க அவர்களுக்குப் பலன் இருந்ததோ? ... உங்கள் தேவன் உங்களை என் கைக்குத் தப்புவிப்பது எப்படி என்கிறார் (2 நாளா. 32:13-15).*

*சனகெரீப் கூறியது சரியா? தேவன் தமது மக்களை தப்புவிக்க வல்லமையில்லாதவராயிருந்தாரா? வசனம் 21ஐக் கவனியுங்கள்:*

> *அப்பொழுது கர்த்தர் ஒரு தூதனை அனுப்பினார்; அவன் அசீரியருடைய ராஜாவின் பாளையத்திலுள்ள சகல பராக்கிரம சாலிகளையும், தலைவரையும், சேனாபதிகளையும் அதம் பண்ணினான்; அப்படியே சனகெரிப் செத்தமுகமாய்த் தன் தேசத்திற்குத் திரும்பினான்; அங்கே அவன் தன் தேவனுடைய*

கோவிலுக்குள் பிரவேசிக்கிறபோது, அவனுடைய கர்ப்பப் பிறப்பான சிலர் அவனைப் பட்டயத்தால் வெட்டிப் போட்டார்கள்.

தேவன் வல்லவர் என்பதைச் சனகெரிப் ஒரு கடினமான வழியில் கற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று!

## இன்றும் கர்த்தர் வல்லவராகவே இருக்கின்றார்

இப்பொழுது நாம் பின்வரும் உணர்வெழுச்சி மிக்க சத்தியத்திற்குக் கடந்து செல்வோம்: தேவன் கடந்த காலத்தில் வல்லவராயிருந்தது மாத்திரமல்ல, இன்றும் வல்லவராகவே இருக்கின்றார்.

ஆபிரகாம் தங்களின் முன்னோடியாய் இருந்ததினால் தங்களுக்குச் சிறப்பான கவனிப்பு தேவை என்று நினைத்த யூதர்களை இயேசு ஒருமுறை கடிந்து கொண்டார். "ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக் கொள்ள நினையாதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவரா யிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத். 3:9; மற்றும் லூக். 3:8ஐயும் காணவும்) என்று யோவான் ஸ்நானன் கூறினார். பழைய ஏற்பாட்டின் காலத்தில் தேவன் வல்லவரா யிருந்தார், இன்னும் அவர் வல்லவராகவே இருக்கின்றார்!

லாயிட் C. டக்ளஸ் என்ற எழுத்தாளர் ஒரு வயதான வயலின் ஆசிரியர் ஒருவரை அவர் வாழ்வை நேர்மறையாய் நோக்குவதனால், சந்திக்க மகிழ்ச்சியடைவார். ஒருமுறை அவர் சென்று அந்த வயதான ஆசிரியரிடம், "இன்றைக்கான நல்ல செய்தி என்ன?" என்று கேட்டார். அந்த ஆசிரியர் இசைக் கருவி ஒன்றைத் தட்டவே அது ஒரு தெளிவான இசையொலிக் குறிப்பைக் கொடுத்தது. உடனே அவர், "அது தான் நல்ல செய்தி" என்று கூறினார். இது இசைச்சரமான "ச"வாக இருக்கிறது. நேற்றும் "ச" வாக இருந்தது, இன்றிலிருந்து ஆயிரமாண்டுகளுக்குப் பிறகும் அது "ச" என்றே இருக்கும். நமது பாடத்தின் நற்செய்தி என்னவென்றால், தேவன் நேற்று வல்லவராக இருந்தார், அவர் இன்று வல்லவராக

இருக்கின்றார், இன்றிலிருந்து பத்தாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் அவர் வல்லவராகவே இருப்பார்!

புதிய ஏற்பாட்டின் வசனப்பகுதிகளில் “வல்லவர்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள, நாம் கவனிக்கும் இவ்வார்த்தைகள் எல்லாம் dunamis என்ற வார்த்தையின் பல வடிவங்களாகும். இவ்வார்த்தையிலிருந்து தான் நாம் “dynamite,” “dynamic” முதலிய வார்த்தைகளைப் பெறுகின்றோம். சில மொழி பெயர்ப்புக்களில் “is able” என்ற சொற்றொடருக்குப் பதிலாக “has power” என்றுள்ளது, ஆனால் இரண்டும் ஒரே சிந்தனையையே கொண்டுள்ளன. நமது தேவன் வல்லமையின் தேவனாக இருக்கின்றார்!

பல செயல்களைச் செய்யக் கூடிய தேவனுடைய செயல் திறன் பற்றி புதிய ஏற்பாடானது நமக்குக் கூறுகின்றது. அவைகளில் பலவற்றை நான் தொட்டுரைக்கலாம் என்று எண்ணுகின்றேன். நீங்கள் பின்வரும் பத்திகளை மறுபடி மறுபடி வாசித்து அவைகளைக் குறித்து அதிசயிப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன்.

### தேவனுடைய இரட்சிக்கும் வல்லமை

நமது அன்பற்ற தன்மையைக் கூடப் பொருட்படுத்தாமல், தேவன் நம்மில் அன்பு கூர வல்லவராயிருந்தார். அவர் தம் குமாரனை அனுப்ப வல்லவராயிருந்தார். இப்பொழுது அவர் மன்னிக்க வல்லவராய் இருக்கின்றார். இது கிருபை என்று அழைக்கப்படுகின்றது - மற்றும் இது தேவனுடைய இரட்சிக்கும் வல்லமையை அறிவிக்கின்றது. எபேசுவின் மூப்பர்களிடத்தில் பவுல், “இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்தி விருத்தியடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கு உங்களை ஒப்புக் கொடுக்கிறேன்” (அப். 20:32) என்று கூறினார்.

இந்த சத்தியமானது எவ்வளவு உயர்ந்த மதிப்புடையது என்பதை நாம் உணருவதற்குத் தேவன் நமக்கு உதவுவாராக. நமக்குள்ளும் மற்றும் நம்மிலும் இரட்சிக்கப்படுவதற்கான செயல்திறன் இல்லை. தேவனிடத்தில் இவ்வல்லமை இல்லையென்றால், நாம் நம்பிக்கையின்றித்தான் இருந்திருப்போம்.

இருந்தாலும் கர்த்தர், "தமது [இயேசுவின்] மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களை ... முற்று முடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கின்றார்" (எபி. 7:25ஆ)!

**வாழ்க்கையின் அறைகூவல்களை நாம் சந்திப்பதில் நமக்கு உதவுவதற்கான தேவனுடைய வல்லமை**

நாம் கிறிஸ்தவர்களான பிறகும் கூட, உலகம் இன்னமும் நம்முடனேயே உள்ளது, சில வேளைகளில் கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதென்பது மிகவும் கடினமானதாக உள்ளது. ரோமர் 7ம் அதிகாரமானது வெளிப்படையான சத்தியத்தை அறிவிக்கின்றது: எந்த ஒரு மனிதரும் தம் சொந்த ஆற்றல் மூலங்களினால் கிறிஸ்தவ வாழ்வை வாழ முடியாதவராய் இருக்கின்றார். தேவனால் இது கூடும் என்பதால் அவரே நன்றிக்கு உரியவர்; அவர் நம்மோடு இருந்து நம்மைப் பெலப்படுத்துவார். இந்த மாபெரும் சத்தியத்தைப் புதிய ஏற்பாட்டின் வசனப்பகுதிகள் ஒன்றன்பின் ஒன்றாக அறிவிக்கின்றன:

(1) எபிரெயர் 2:18ஆ, இயேசுவைப் பற்றிப் பேசுகையில், "அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கின்றார்" என்று அறிவிக்கின்றது.

(2) 2 தீமோத்தேயு 1:12ஆ வில் நாம், "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" என்று வாசிக்கின்றோம்.

(3) ஒரு மனிதர் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவராய் இருந்தும், விமர்சனம் செய்யப்பட்டாரென்றால், அவர் பின்வரும் வாக்குத்தத்தத்தைப் பெறுகின்றார்: "தேவன் அவனை நிலைநிறுத்த வல்லவராயிருக்கிறாரே" (ரோமர் 14:4இ).

(4) "தேவன் வல்லவராயிருக்கின்றார்" என்ற இந்த சத்தியமானது உக்கிராணத்துவத்தின் பாடக்கருத்தில் கூட செயல் விளைவை ஏற்படுத்துகின்றது. இன்றைய நாட்களில் பொருளாதார அழுத்தங்களின் வெளிச்சத்தில் நாம் எவ்விதம் இருக்க வேண்டிய விதத்திலான உக்கிராணக்காரர்களாய் இருக்க முடியும்? இதற்கான எளிய பதில், நம்மால் முடியாது என்பதே ஆகும். நமக்கு நாமே அப்படி இருக்க முடியாது. அந்த வல்லமை நம்மிடம் இல்லை; ஆனால் நமது தேவனால் அது

கூடும். கொடுத்தல் பற்றிய மாபெரும் இரு அதிகாரங்கள் 2 கொரிந்தியர் 8 மற்றும் 9ம் அதிகாரங்கள் ஆகும்.

> அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல; தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார் ... தேவனுக்கு எங்களால் ஸ்தோத்திரமுண்டாவதற்கு ஏதுவாயிருக்கும் மிகுந்த உதாரகுணத்திலே நீங்கள் எவ்விதத்திலும் சம்பூரணமுள்ளவர்களாவீர்கள் (2 கொரி. 9:7-11).

என்று நாம் வாசிக்கின்றோம்.

(5) அடுத்ததாக, நமது சிந்தையைத் தள்ளாடச் செய்யும் அற்புதமானதொரு வசனப் பகுதிக்கு நாம் வருகின்றோம்: "நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு" (எபே. 3:20). நம்முடைய வல்லமைகளுக்கு வரையறையொன்று உள்ளது; தேவனுடைய வல்லமைக்கோ வரையறை எதுவும் இல்லை!

## நாம் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு உதவும் தேவனுடைய வல்லமை

எபிரெயர் 7:25 வசனமானது தேவனுடைய இரட்சிக்கும் வல்லமை பற்றிப் பேசுகின்றதென்று நான் முன்னமே குறிப்பிட்டிருந்தேன். அவ்விடத்தின் சிந்தனையை நிறைவு செய்வதற்கு நாம் மறுபடியும் அவ்வசனப் பகுதிக்குத் திரும்புவோம்: "மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால், அவர்களை முற்று முடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்." உங்களுக்குப் பிரச்சனைகள் ஏராளமாய் ஏற்பட்டிருப்பினும், அடுத்த அறையில் இயேசு உங்களுக்காக ஜெபிப்பதை நீங்கள் கேட்க முடிந்தால், நீங்கள் எதிர்கொண்ட எல்லாவற்றிலும் அது உங்களுக்கு உதவியாயிருக்காதா? இயேசுவின் இருப்பானது அவ்வளவு மாறுபாட்டை ஏற்படுத்த வேண்டுமா? அவர் பரலோகத்தில்

நமக்காகத் தொடர்ந்து வேண்டுதல் செய்து கொண்டிருக்கின்றார். யூதா 24, 25ல் நாம் பின்வரும் மாபெரும் ஆசீர்வாதத்தைப் பெற்றுள்ளோம்:

> *வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும், தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்.*

மாம்சத்தில் நாம் நடுங்குகின்றோம். சரீரமானது தொடர்ந்து அழிந்து கொண்டிருக்கிறது என்று நாம் அறிகின்றோம்; கல்லறை நோக்கிச் செல்லும் நிச்சயமான பயணத்தைத் தடுத்து நிறுத்தும் வல்லமை நமக்குள்ளாக இல்லை; ஆனால் வெற்றியடைவதில் தேவன் நமக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கின்றார்.

> *நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையுள்ள சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார் (பிலி. 3:20, 21).*

என்று பவுல் எழுதினார். இவ்வசனப் பகுதியின் முடிவில் (தமிழில் இடையில் உள்ளது) "அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத் தக்க *தம்முடைய வல்லமையான செயலின்படியே*" என்று KJVயில் உள்ளது.

தேவன் நம்மோடு இருக்கும்பொழுது, நாம் நம்முடைய சொந்த பெலத்தின் மீது அல்ல, அவரது பெலத்தின் மீதே சாய்ந்து கொள்ள முடியும். தேவனுடைய உதவியுடன் நாம் வெற்றிகரமான வாழ்க்கையை நடத்த முடியும்!

# தேவன் வல்லவராய் இருக்க நிபந்தனைகள்

*சிந்தனை மிக்கவர்களாய் இருக்கக் கூடிய தேவபிள்ளைகள், தேவன் தம்மால் செய்யக் கூடிய ஒவ்வொரு செயலையும் தாமாகவே செய்து விடுவதில்லை என்ற உண்மையை எப்பொழுதும் உணருகின்றார்கள். ஆகையால் தேவன் வல்லவ ராய் இருக்கின்றார் என்ற கூற்றுடன் அவர் அவ்வாறு இருக்க நிபந்தனைகள் என்பதைச் சேர்க்க வேண்டியது அவசியமாகும்: "தேவன் செய்ய வல்லவராய் இருக்க (அவர் செய்து முடிப்பார்) நிபந்தனைகள் ..."*

### *அது அவருடைய சித்தத்தின்படியானதாயிருந்தால்*

*செய்யப்பட வேண்டியது எதுவோ, அது தேவனுடைய சித்தத்தின்படியானதாயிருந்தால், அவர் அதைச் செய்ய வல்லவராய் இருக்கின்றார்.*

*தானியேல் 3ல் உள்ள நமது வேதபாடப் பகுதிக்கு நாம் மறுபடியும் திரும்பிச் செல்வோம். இன்னமும் வசனம் 18ஐ நாம் குறிப்பிடவில்லை. "நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கின்றார்" (வ. 17அ) என்று கூறிய பிறகு, சாத்ராக், மேஷாக் மற்றும் ஆபேத்நேகோ ஆகிய அம்மூவரும், "விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை; நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக் கடவது" (வ. 18) என்றும் கூடக் கூறினார்கள். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர்கள், "கர்த்தர் எங்களை விடுவிக்கா மலிருக்கச் சித்தமாய் இருந்தாலும், அப்பொழுதும் நாங்கள் அவரில் அன்பு கூர்ந்து சேவிப்போம்" என்று கூறினார்கள். முடிவில் அவர்களை விடுவிப்பதே தேவனுடைய சித்தமாய் இருந்தது, ஆனால் அவ்வாறு இல்லாமல் போகும் சாத்தியக் கூற்றையும் அவர்கள் உணர்ந்திருந்தார்கள் - அப்படி நடந்திருந் தாலும், அது அவர்களைப் பொறுத்தமட்டில் ஏற்றுக் கொள்ளக் கூடியதேயாகும்.*

*தேவன் தம்மால் செய்ய முடிந்த எல்லாவற்றையும் செய்து விடுகிறதில்லை என்பதற்கு சிலுவையானது ஆழப்பதியும்*

எடுத்துக்காட்டாக உள்ளது. கெத்சமெனே தோட்டத்தில் இயேசு, "... தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து ..." என்று எபிரெயர் 5:7ல் நாம் வாசிக்கின்றோம். தேவன், இயேசுவை மரணத்தினின்று இரட்சிக்க வல்லவராகவே இருந்தார், ஆனால் அவ்வாறு அவர் செய்யவில்லை. ஏன்? ஏனென்றால் அது அவருடைய (தேவனுடைய) சித்தத்தின்படியானதாய் இருக்கவில்லை. இருப்பினும் இயேசுவின் ஜெபம் கேட்கப்பட்டு அதற்கு இன்னொரு வழியில் பதில் அளிக்கப்பட்டதென்று எபிரெயர் 5:7ல் கூறப்படுவதைக் கவனியுங்கள்.

தேவனுடைய வல்லமையைப் பொறுத்தமட்டில், கெத்சமெனே தோட்டத்தில் இயேசுவுக்கிருந்த அதே எண்ணப்போக்கு நமக்கு அவசியம் தேவைப்படுகின்றது: "என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (லூக். 22:42ஆ; மற்றும் மத். 26:39; 1 கொரி. 4:19; யாக். 4:15 ஆகிய வசனங்களையும் காணவும்).

**நாம் அவரை அனுமதித்தால்**

இரண்டாவதாக, *நாம் அவரை அனுமதித்தால்*, தேவனால் கூடும்.

"நாம் அவரை அனுமதித்தால்" என்ற சொற்றொடரானது வினோதமாகத் தெரியலாம் - ஆனால் நாம் தேவனை வரையறைப் படுத்த முடியும். அவ்விதமாகவே தேவன் நமது உலகத்தை ஏற்படுத்தியிருக்கின்றார்.

*அவிசுவாசத்தினால்* நாம் அவர் வரையறைப் படுத்த முடியும். மத்தேயு 9:28ஆ-30ஆ-வில் இயேசு, பார்வையற்ற இரண்டு மனிதர்களை நோக்கி, "'இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா?' என்று கேட்டார். அவர்கள் அவரிடத்தில் 'ஆம், விசுவாசிக்கிறோம் ஆண்டவரே!' என்றார்கள். அப்பொழுது, அவர்களுடைய கண்களை அவர் தொட்டு 'உங்கள் விசுவாசத்தின்படியே ஆகக்கடவது' என்றார். உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது."

*அறியாமையினால்* நாம் அவரை வரையறைப்படுத்த முடியும். தேவனுடைய வார்த்தையானது தேவனைப் பற்றிய

விளக்கமாகவே உள்ளது, எனவே தேவனுடைய வார்த்தை யானது வல்லமையுள்ளது - அது நம்மை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவர்களாக்குகின்றது (2 தீமோ. 3:15) மற்றும் நம்மை இரட்சிக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது (யாக். 1:21) என்று கூறும் வசனங்களைக் காண்கையில் நாம் திகைப்படை வதில்லை. இருந்தாலும், நாம் அவ்வார்த்தையை அறியாதவர் களாயிருந்தால், அது நம் வாழ்வில் வல்லமை உடையதா யிருக்காது.

கீழ்ப்படியாமையினாலும் நாம் அவரை வரையறைப் படுத்த முடியும். இதற்கு மறுபுறத்தில், நாம் நமது வாழ்க்கையை அவருக்கு ஒப்புக் கொடுத்தால், அவர் நம்மை வல்லமையினால் நிரப்ப முடியும். நேபுகாத்நேச்சார் தாம் கண்ட கனவு ஒன்றுக்குப் பிறகு தானியேலிடம் கூறியது என் நினைவுக்கு வருகின்றது: "... என் ராஜ்யத்திலுள்ள ஞானிகள் எல்லாராலும் இதின் அர்த்தத்தை எனக்குத் தெரிவிக்கக் கூடாமற் போயிற்று; நீயோ இதைத் தெரிவிக்கத் தக்கவன்; பரிசுத்த தேவர்களுடைய ஆவி உனக்குள் இருக்கிறதே" (தானி. 4:18). உண்மையான தேவனைப் பற்றி நேபுகாத்நேச்சார் அதிகமாய் அறிந்திருக்க வில்லை, ஆனால் தேவனுடைய ஆவியைப் பெற்றிருக்கும் ஒருவர் வல்லமையுடன் இருப்பார் என்று அவர் அறிந் திருந்தார். வேதாகமத்தில் ஆச்சரியமான செயல்களை நிறை வேற்றிய மாபெரும் நபர்கள் யாவரும் உண்மையில் உங்களை யும் என்னையும் போன்று பலவீனமானவர்களே - ஆனால் அவர்கள் தேவனுடைய வல்லமையைப் பெற்றிருந்தார்கள்.

நமது சொந்த வாழ்வும் வல்லமை பெற முடியும் (எபே. 3:20) - அது அற்புத வல்லமையல்ல, ஆனால் இன்னமும் உண்மையான வல்லமையாகும். அந்த வல்லமை நமக்குத் தேவை. நாம் இன்றி தேவனால் எதையும் செய்ய முடியும்; தேவனின்றி நம்மால் ஒன்றும் செய்ய முடியாது!

## முடிவுரை

நீங்கள் தேவனுக்கு விசேஷித்தவர்; அதை நீங்கள் உணரு கின்றீர்களா? நான் மிகவும் ஆர்வமாய் உள்ள ஒரு விஷயத்தை, ஒருபொழுதும் கவனித்திராத ஒரு விஷயத்தை யாரோ ஒருவர் எனக்கு ஒரு நாளில் சுட்டிக்காட்டினார். மத்தேயு 10:29, 31ல்

“ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்த மில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது”; “ஆதலால் பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களா யிருக்கிறீர்கள்” என்று கூறப்படுகின்றது. ஒரு காசுக்கு இரண்டு குருவிகள் விற்கப்பட்டன. “காசு” என்று மொழிபெயர்க்கப் பட்ட கிரேக்க வார்த்தையானது மிகச் சிறிய மதிப்புடைய சிறு செப்புக்காசைக் குறிப்பிட்டது.

இப்பொழுது லூக்கா 12:6, 7ஐப் பாருங்கள்: “இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை விற்கிறார் களல்லவா? அவைகளில் ஒன்றாகிலும் தேவனால் மறக்கப் படுகிறதில்லை. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப் பட்டிருக்கிறது, ஆகையால் பயப்படாதிருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்த வர்களாயிருக்கிறீர்கள்.” இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகள் விற்கப்பட்டன. இரு குருவிகள் ஒரு காசு விலை யென்றால், நான்கு குருவிகளே இரு காசு விலை பெறும். இருப்பினும், லூக்கா 12ல் இரு காசுக்கு ஐந்து குருவிகள் விற்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அந்தக் “கூடுதலான” குருவி எப்படி வந்தது? பேரம் பேசுகையில் அது இலவசமாகத் தூக்கி எறியப்பட்டிருக்க வேண்டும் என்பது உறுதி. அது அந்த அளவுக்கு மதிப்பற்றதாயிருந்தது! இருப்பினும், தேவன் அதன் மீதும் கவனம் செலுத்தினார்.

மதிப்பற்ற ஒரு குருவியின் மேல் தேவன் கவனம் செலுத்து வாரென்றால், உங்கள் மீது அவர் எவ்வளவு அதிகமாய்க் கவனம் செலுத்துவார்! வல்லமையுள்ள தேவன் பேரில் நம்பிக்கையாயிருங்கள்!

இதை நாம் முடிக்கையில், தேவன் வல்லமையுள்ளவராய் இருக்கின்றார் என்பதன்மேல் நிறைவாக இரு வசனப் பகுதி களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். தேவன் இரட்சிக்க வல்லவராய் இருக்கின்றார் என்பது நல்ல செய்தியாகும்; தேவன் அழிக்கவும் வல்லவராய் இருக்கின்றார் என்பது மோச மான செய்தியாகும். மத்தேயு 10:28ல் இயேசு தாம் அனுப்பிய தம் சீஷர்களிடத்தில், “ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களா யிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள்

*பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்'' என்று கூறினார். யாக்கோபு 4:12ல், ''நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒருவரே, அவரே இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர்'' என்று கூறப்படுகின்றது.*

*கர்த்தர் உங்களுக்கு இரட்சிக்க வல்லமையுள்ள தேவனாக இருப்பாரா? அல்லது அழிக்க வல்லமையுள்ள தேவனாக இருப்பாரா? அது உங்களைப் பொறுத்ததேயாகும். உங்கள் வாழ்வை நீங்கள் அவருக்கு ஒப்புவிக்க வேண்டியிருந்தால், இன்றே அவ்வாறு செய்யுங்கள்!*